ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி பாராளுமன்ற அங்கத்தவர் சட்டத்தரணி

# அல்ஹாஜ் ஏ.எம். சம்சுதீன் ஜே.பி.யூ.எம்.

அவர்கள் கடந்த 1994-03-22 ல் பாராளுமன்றத்தில் ஆற்றிய கன்னியுரையின் தமிழ் மொழியாக்கம்



ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான சட்டத்தரணி, அல்-ஹாஜ் ஏ.எம். சம்சுதீன் அவர்கள் கடந்த 22-03-1994 எமது பிரதேசத்தின் அபிவிருத்தியையும் எம் மக்களின் அபிலாஷைகளையும் கருத்திற்கொண்டு பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையினை பாராளுமன்ற அதிகார அரிக்கை (Hansard) யிலிருந்து பிரதியாக்கம் செய்து வழங்குகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற அங்கத்தவர் சட்டத்தரணி

# அல்-ஹாஜ் ஏ.எம். சம்சுதீன் ஜே.பி.யூ.எம். அவர்கள்

## கடந்த 1994-03-22 ல் பாராளுமன்றத்தில் ஆற்றிய கன்னியுரையின் தமிழ் மொழியாக்கம்

"பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்"

இன்று இக் கௌரவ சபையில் எனது கன்னிப் பேச்சினை, ஆற்றுவதற்காக எழுந்துள்ளேன் என்னை காலஞ்சென்ற T.W. ராஜரட்ணம் அவர்களின் வெற்றிடத்துக்கு நியமித்தமைக்காக முதற்கண் எனது தலைவி மதிப்பிற்குரிய திருமதி சிறிமாவோ ஆர்.டீ. பண்டார நாயக்கா அவர்கட்கு எனது நன்றியறிதலைத் தெரிவிக்கின்றேன். எனது கட்சியினால் கிழக்குமாகாணத்தில் வாழுகின்ற சிறுபான்மையினரை பிரதி நிதித்துவப் படுத்துவதற்காக நான் நியமிக்கப்பட்டுள்ளேன் என்பதை நன்குணர்கின்றேன். அதனை ஆணையாகக் கொண்டு எனது சக்திக்கும் ஆற்றலுக்கும் ஏற்ப நான் பாடுபடுவேன். எனக்கு வழங்கப்பட்ட இக் குறுகிய நேரத்தினுள், அவசரகாலச் சட்ட விவாதத்தில், கிழக்கு மாகாணத்தில் வாழ்கின்ற சிறுபான்மை மக்களின், முக்கியமான சில விடயங்களைப் பற்றிப் பேசக் கிடைத்தமைக்கு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது மாண்பு மிகு ஜனாதிபதியவர்கள் இதனை தேர்தல் ஆண்டு எனக் கூறியுள்ளார். நாங்கள் தற்போது கிழக்கிலும் வவுனியாவிலும் உள்ளூராட்சித் தேர்தல் ஒன்றை நடத்தி முடித்து, தெற்கில் ஒரு மாகாணசபைத் தேர்தலை எதிர்நோக்கியுள்ளோம். அதனைத் தொடர்ந்து ஒரு பொதுத் தேர்தல் அல்லது ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. எனவே இச்சந்தர்ப்பத்தில் நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல் நியாயமானதாக நடைபெற்றதா என ஆராய்வது பொருத்தமானதாகும். கௌரவ பிரதம மந்திரியவர்கள் இத்தேர்தலை ஜனநாயகத்துக்கான ஒரு வெற்றி என வர்ணித்துள்ளார். அவர் கூறியது உண்மையெனக் கொள்ள முடியாதுள்ளது. வாக்காளர்கள் சுயமாகவும் சுதந்திரமாகவும் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டார்களா? தேர்தல் நேர்மையாகவோ, ஜனநாயக முறைப்படியோ நடைபெற்றதா? இதனை நாம் நன்கு ஆராய்ந்து பார்க்க வேண்டும். இத்தேர்தல் மக்களின் உணர்வுகளையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணங்களையும் வெளிப்படுத்தியதா? எனது கருத்துப்படி இத் தேர்தல் நேர்மையாக நடைபெறவில்லை. இதனைக் கூற நான் மனம் வருந்துகிறேன். கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற தேர்தலில் அரசாங்கம் தனது வேட்பாளர்களை வெற்றியடையச் செய்ய தங்களாலான சகல பிரயத்தனங்களையும் செய்தது. அதற்காக ஜனநாயக வழிமுறைகளையோ அல்லது நேர்மையான நடவடிக்கைகளையோ அது மேற்கொள்ளவில்லை. அதற்காக அனாகரிகமான முறைகேடான செயல்களையும் நடவடிக்கை களையும் எண்ணமாகக் கொண்டு செயல்பட்டது. அரசு தங்களுக்குச் சாதகமாக அரசு இயந்திரத்தையும் வாகனங்களையும் அதிகாரங்களையும் சுதந்திரமாகப் பயன்படுத்தியது. தற்பொழுது தெற்கிலும் இதேபோன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. விசேடமாக கிராம அதிகாரிகள் இத்தேர்தலில் UNF யின் தேர்தல் முகவர்களாகச் செயல்பட்டனர். தலைவர் அவர்களே. உங்களுக்குத் தெரியும் கிராம உத்தியோகத்தர்கள் கிராமப்புறங்களில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவர்கள். அத்துடன் கிராம மக்கள் தங்களின் ஒவ்வொரு தேவைக்கும் கிராம உத்தியோகத்தர்களில் தங்கியுள்ளார்கள். சாதாரண மக்களின் கருமங்களைக் கவனிக்கும் அதிகாரிகளே அவர்கள். அவர்களின் சிபார்சுகளின்றி நாம் எதனையும் செய்ய முடியாது. ஜனசவிய உதவி பெறுபவர்களை அவர்களே தெரிவு செய்கின்றனர். ஜனசவிய நிவாரணப்பொருட்கள் அவர்களினாலேயே பங்கிடப்படுகின்றன. ஆகவே மதிப்புக்குரிய தலைவர் அவர்களே இதன்மூலம் கிராம மக்கள் வாழ்க்கையில் எத்துணை முக்கியத்துவத்தினை இவர்கள் பெறுகின்றார்கள் என்பதை நீங்கள் உணர்வீர்கள். இவ்வாறானவர்கள் ஒரு குறித்த அரசியல் கட்சியின் அரசியல் முகவர்களாக செயல்பட்டால் விளைவு எவ்வாறு இருக்கும் என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க முடியும். கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற தேர்தலில் நேரடியாக பங்கு கொண்டவன் என்ற வகையில் நான் கிராம சேவை உத்தியோகத்தர் ஒருவர் ஜனசவிய பெறுபவர்கள் கூட்டமொன்றில் எல்லோரும் ஐ.தே. கட்சிக்கு வாக்களிக்கும் படியும் அவ்வாறு வாக்களிக்காவிடில் அவர்களது ஜனசவிய நிவாரண உதவிகள் மறுக்கப்படும் எனவும் பேசிக் கொண்டிருந்ததை அவதானித்தேன். அத்துடன் கிராம உத்தியோகத்தர் ஒருவர் தமிழ் பகுதியில் உள்ள வாக்குச் சாவடியின் அருகாமையில் நின்று கொண்டு அங்கு வாக்களிக்க வந்திருந்த வாக்காளர்களிடம் ஐ.தே. கட்சிக்கு வாக்களிக்கும்படி அறிவுரை வழங்கிக் கொண்டிருந்தார்; இது நடைபெற்றது கிழக்கு மாகாணத்திலாகும்.

கௌரவ தலைவர் அவர்களே, இவ்வரசாங்கம் தேர்தலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்வைத்து பிழையான வாக்குறுதிகள் பலவற்றை வழங்கியிருந்தமையையும் உங்கள் கவனத்துக்கு கொண்டுவர விரும்புகிறேன். உதாரணமாக 1992ம் ஆண்டு வாக்காளர் இடாப்புக் கணிப்பின்படி 52,000 வாக்காளர்களைக் கொண்ட கல்முனைத் தொகுதிக்கு ஒரேயொரு பிரதேச சபையே உண்டு. இது இந்நாட்டிலுள்ள மிகப் பெரிய பிரதேச சபையாகும். ஆனால் 30,000 சனத் தொகையைக் கொண்ட சாய்ந்தமருது மக்கள் கல்முனையில் இருந்து தங்களைப் பிரித்து தங்களுக்கு தனியான ஒரு பிரதேசசபை அமைத்துத் தர முடியாதா என அங்கலாய்க்கின்றனர். அவ்வூர் மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுக்கவில்லை. இது தொடர்பாக கௌரவ வர்த்தக வாணிபத்துறை அமைச்சரை இம்மக்கள் பலமுறை சந்தித்துள்ளனர். பல விதமான மகாநாடுகள் பொது நிர்வாக அமைச்சருடன் கூடியுள்ளார்கள். ஆனால் கண்ட பலன் எதவுமில்லை. ஆனால் கடந்த கிழக்கு மாகாண தேர்தலின்போது கௌரவ வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் அவர்கள் கௌரவ பொது நிர்வாக அமைச்சர் அவர்களை இக்கிராமத்துக்கு அழைத்து வந்து இக்கிராம மக்கள் ஐ.தே. கட்சிக்கு வாக்களித்தால் தேர்தலின் பின் உடனடியாக சாய்ந்தமருது பிரிக்கப்பட்டு அதற்கு தனியான ஒரு பிரதேசசபை அமைத்துத் தருகிறோம் என வாக்குறுதியளித்தார்கள். இதே போன்று வாக்குறுதி கல்முனைத் தேர்தல் தொகுதியிலுள்ள தமிழ் மக்களுக்கும் கொடுக்கப்பட்டது. கௌரவ தலைவர் அவர்களே இதனை அரசு செய்ய வேண்டாமென்று நான் கூறவில்லை. நான் கூறுவதெல்லாம் நியாயமான கோரிக்கைக்கு மதிப்புக் கொடுத்து நடைமுறைப்படுத்துங்கள். இக்கிராமம் ஒரு தனியான பிரதேச சபையொன்றை கோருவது நியாயமெனக் கண்டால் அதனை நிறைவேற்றிக் கொடுங்கள். அதற்காக பொருத்தமற்ற நிபந்தனைகளை விதிக்காதீர்கள். இதனைச் செய்வதற்காக ஐ.தே.கட்சிக்கு அவர்கள் வாக்களிக்க கோரும் நிபந்தனைகளை வையாதீர்கள்.

தேர்தல் பிரசாரத்தின்போது ஐ.தே.க. மேலும் ஒரு படியாகச்சென்று பிரசுரமொன்றை வெளியிட்டது. அது ஜனசவிய அமைச்சுக்குப் பொறுப்பான கௌரவ வீரசிங்க மல்லிமாராய்ச்சி அவர்களால் வெளியிடப்பட்டதாக அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஜனசவிய பெறுபவர்களை ஐ.தே. கட்சிக்கே வாக்களிக்குமாறு கேட்டிருந்தார்கள். (குறுக்கீடு)

இவ்வேளை கௌரவ அமைச்சர் வீரசிங்க மல்லிமாராய்ச்சி குறுக்கீடு செய்து தான் அவ்வாறான பிரசுரமொன்றினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிடவில்லையெனவும் அக்கூற்று வாபஸ் பெறப்படல் வேண்டும் எனவும் தலைவரை வேண்டிக் கொண்டார். அதில் தனது கையெழுத்தில்லாததால் அதனை தான் பிரசுரித்ததாகக் கொள்ள முடியாதெனக் கூறினார்.

அப்பொழுது குழுக்களின் பிரதித் தவிசாளர் அவர்கள், கௌரவ அமைச்சர் அதனை மறுப்பதாக சபைக்குக் கூறினார்.

ஆதாரமின்றி எதனையும் நான் கூற மாட்டேன் என பாராளுமன்ற உறுப்பினர் சம்சுதீன் அவர்கள் கூறியபின் குழுக்களின் பிரதித் தவிசாளர் கௌரவ அமைச்சர் அக்கூற்றை மறுப்பதால் அது பதிவு செய்யப்பட வேண்டுமென்ற அறிக்கையைத் தொடர்ந்து, பாராளுமன்ற உறுப்பினர் ஜனாப் சம்சுதீன் அவர்கள், கௌரவ அமைச்சர் அவர்கள் இதனை அறியாமல் இருக்கலாம். ஆனால் அவ்வாறு பிரசுரிக்கப்பட்ட பிரசுரத்தை சபையின் முன் சமர்ப்பிக்கத் தயாராகவுள்ளேன். அது தமிழில் உள்ளது அதனை நான் வாசிக்கின்றேன்.

"ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தின் ஜனசக்தி உதவியாக 2500 ரூபா பெறும் கல்முனைப் பிரதேசத்தில் வாழும் குடும்பங்கள் நன்றிக்கடன் செலுத்து முகமாக பிரதேச சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் யானைச் சின்னத்துக்கு வாக்களிக்குமாறு வேண்டுகிறேன்."

(இவ்வேளையில் சபையின் அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த கௌரவ உறுப்பினர்களிடமிருந்து இடைமீடுகள் வருகின்றன.) கௌரவ வீரசிங்க மல்லிமாராய்ச்சி அமைச்சர் அவர்கள் தமிழில் "என்னுடைய பெயரை இன்னுமொரு ஆள் போட இயலும் எனக் கூறினார்."

அதனைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர் ஜனாப் சம்சுதீன் அவர்கள் பேசும் போது "அவ்வாறு இருக்க முடியும். நான் மனச் சுத்தியோடு கூறுகின்றேன். கௌரவ அமைச்சர் அவர்கள் அதனை அறியாதிருக்கலாம், ஆனால் அவ்வாறு பிரசுரிக்கப்பட்டுள்ளது. மேலும் அதில் ஜனசவிய நன்மை பெறுபவர்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்குப்பண்ணா விடில் அது நீங்கள் கௌரவ மல்லிமாராய்ச்சி அவர்களையோ அல்லது கௌரவ மன்சூர் அவர்களையோ புறக்கணித்து விட்டீர்கள் என்ற கருத்தல்ல, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் புறக்கணித்ததாகவே கொள்ளலாம்." என்று வாசித்து அந்த அளவுக்கு ஐ.தே.கட்சி சென்றுள்ளது எனக் கூறினார். இனவாத அரசியலைக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தமைக்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை குறை கூறும் நீங்கள் நபிகள் (ஸல்) அவர்களின் பெயருக்கு அபகீர்த்தி ஏற்படும் வகையிலும், அன்னார் அவர்களை அவதூறுப்படுத்தும் அளவுக்கும் தங்கள் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்துடன் நீங்கள் நின்றுவிடவில்லை பொதுவான அச்சுறுத்தலுடன் காடைத்தனத்தையும் கட்டவிழ்த்து விட்டிருந்தீர்கள்.

உங்களுக்குத் தெரியும் கிழக்கு மாகாண மக்கள், அவர்களின் பாதுகாப்புக்கு விசேட அதிரடிப்படையினரையும், இராணுவ முகாம்களையும் நம்பியிருக்கிறார்கள். மக்களைப் பாதுகாப்பதற்காக அவை கிழக்குமாகாணத்தில் பல கேந்திர இடங்களிலும் அமைக்கப்பட்டுள்ளது. இவை மக்களின் பாதுகாப்புக்கு மிக மிக அத்தியாவசியமானவையாகும். ஆனால் தேர்தல் காலங்களில் நீங்கள் என்ன செய்தீர்கள் ? மக்கள் மத்தியில் நீங்கள் சென்று ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிக்கா விடில் அவற்றையெல்லாம் வாபஸ் பெற்று விடுவோம் எனக் கூறி பயமுறுத்தினீர்கள். பாதுகாப்புப்படையினரின் முகாம்களை தங்களின் பாதுகாப்புக்கென நம்பிக் கொண்டிருந்த மக்களின் எதிர் விளைவான தீர்ப்பு எவ்வாறு அமைந்திருந்தது என்பதை சற்று எண்ணிப்பாருங்கள். தேர்தலின் முன்னிரவு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் ஒருவரையும், அவரது மனைவி, 25 இளைஞர்கள், 25 ஊழியர்கள் எவ்வித குற்றச்சாட்டுகளுமின்றி, இரவு 9.00 மணி தொடக்கம் மறு நாட்காலை 3.00 மணிவரை கல்முனைப் பொலிஸ் நிலையத்தில் என்ன காரணத்துக்காக தடுத்து வைத்திருந்தீர்கள்.

அச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவர்களின் பிரதேசத்தினுள் ஊடுருவி சாராயம், சாறி, சாரம், பணம் என்பவற்றைப் பகிர்ந்தளிக்கும் ஒரு சந்தர்ப்பத்தை உண்டாக்கிக்கொண்டீர்கள் இவ்வாறுதான் நீங்கள் இங்கு தேர்தலை நடத்தினீர்கள். இதனைத்தான் எமது மாண்புமிகு பிரதம அமைச்சர். ஜனநாயகத்துக்கான வெற்றி என வர்ணித்துள்ளார். கிழக்கு மாகாணத்தில் பாரிய வெற்றி யடைந்துள்ளோம் என ஐ.தே.க. மார்தட்டி வீராப்புப் பேசுகின்றது. சற்று சில நிமிடங்களுக்கு முன்னர் கௌரவ அங்கத்தவர் ஒருவர் இத்தேர்தலை நடத்தியமைக்காக முழு உலகமே பாராட்டுகின்றது எனக் கூறினார். ஆனால் தேர்தல் நடந்த முறையினை அறிந்தால் தான் உண்மையான நிலை அவர்களுக்குப் புரியும்.

கௌரவ தலைவர் அவர்களே தற்பொழுது நான் மற்றொரு விடயத்துக்கு வருகிறேன். அண்மைக் காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சியின் போக்கு சிறுபான்மையினரைப் பொறுத்த மட்டில் ஒரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றமான தன்மையைக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர்களினதும், அதிமேதகு ஜனாதிபதியின் கூற்றுக்கள் என்று தொடங்கும் போது (கௌரவ திரோன் பெர்னாண்டோ, தகவல் ஒலிபரப்பு அமைச்சர்) அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்சினையொன்றைக் கிளப்பி, அதிமேதகு ஜனாதிபதியைப் பற்றி கருத்துத் தெரிவிக்க முடியாதென குறுக்கீடு செய்தார்.

அப்பொழுது பாராளுமன்ற உறுப்பினர் அல்-ஹாஜ் ஏ.எம். சம்சுதீன் அவர்கள் நான் மேதகு ஜனாதிபதி கூறியவற்றைக் கூறவில்லை. அதியுத்தம ஜனாதிபதியும் கௌரவ அமைச்சர்களும் சிறுபான்மையினர் தொடர்பாக என்ன கூறினார் என்பது பற்றி இச்சபையே அறியும். அனேகமான சபை உறுப்பினர்கள், அவர்களின் போக்குகளில் கொண்டுள்ள மாற்றம் பற்றி கடந்த பல அவசரகால விவாதத்தின்போது கூறிய கருத்துக்களை என்னால் வாசிக்க முடிந்தது. வடக்கு கிழக்கு தேர்தல் நடத்துவதில், முஸ்லிம்கள் மனம் புண்பட்டுள்ளது ஏனெனில் இத்தேர்தல் முஸ்லிம்களின் புனித மாதமான ரம்ஸான் மாதத்தில் நடந்துள்ளது. கௌரவ பிரதித் தலைவர் அவர்களே, கிழக்கு மாகாணத்தில் வாழும் மக்களில் 1/ 3 பங்கினர் முஸ்லிம்கள். முஸ்லிம்களின் புனித மாதமான றம்ழான் மாதத்தில் தேர்தலை நடத்தக்கூடாது என அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களுடன் சேர்ந்து எதிரணியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களும் விசேடமாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் அவர்களும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனை நாங்கள் பத்திரிகைகளில் வாசித்தோம். இவ்வாறான எதிர்ப்புக்கு மத்தியிலும் முஸ்லிம்களின் உணர்வை சிறிதளவும் மதிக்காமல் தேர்தலை அரசாங்கம் நடத்தி முடித்தது.

கௌரவ பிரதித் தவிசாளர் அவர்களே, உங்களுக்குத் தெரியும் ஏனைய மாதங்களைப் போலல்லாமல் புனித றமழான் மாதத்தில் முஸ்லிம்கள் முக்கிய கடமைகளில் ஒன்றான நோன்பை நோற்கின்றனர். அத்துடன் தராவீஹ் தொழுகை, ஏனைய தொழுகைகளுக்காக பள்ளிவாசலுக்குச் செல்கின்றனர். ஹதிஸ் மஜ்லிஸ் ஏனைய மார்க்க அனுட்டானங்களை மேற்கொள்ளுகின்றனர். இத்தேர்தல் இப்புனித றமழான் மாதத்தில் நடைபெற்றதால் இவ்வாறான மார்க்க அனுஸ்டானங்களுக்கு இத்தேர்தல் நடவடிக்கைகள் குந்தகமாக அமைந்திருந்தன. இது அரசாங்கம் அல்லது ஐ.தே.க. யினால் முஸ்லிம்களின் உணர்வுகளுக்கும், மத வழிபாடுகளுக்கும் அவமானத்தை ஏற்படுத்தும் செயல்களாக விளங்கின. அத்துடன் சிறுபான்மையினர் தொடர்பாக அரசாங்கத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போதைய மனப்போக்கில் மாற்றத்தையே சுட்டிக் காட்டுகின்றன.

கௌரவ பிரதித் தவிசாளர் அவர்களே இப்பொழுது அரசாங்கம் கிழக்கில் தேர்தலில் வெற்றிவாகை சூடிவிட்டோம் என்று கூறுகின்றது. அதன் முடிவுகள் எந்தக் கட்சியினதும், செல்வாக்கு வளர்ச்சியையோ அல்லது செல்வாக்கு வீழ்ச்சியையோ சுட்டிக்காட்டவில்லை. ஏதாவது ஒரு குறிப்பிட்ட கட்சி அனேக ஸ்தானங்களைக் கைப் பற்றி இருக்கின்றது என்று கூறினால் அக்கட்சி பிரபல்யம் பெற்றுவிட்டது என்ற கருத்தல்ல. ஏனெனில் ஒரு கட்சியின் கொள்கையும் அதன் செயல்திட்டமும் இத்தேர்தலில் ஒரு விடயமாக முன்வைக்கப்படவில்லை. ஒரு கிராம சபைத்தேர்தல் அல்லது உள்ளூராட்சித்தேர்தல் கிராம மட்டத்தில் நடைபெற்ற ஒரு தேர்தல். இதில் மக்கள் அரசியல் கட்சியையும் கொள்கையும் செயல் திட்டம் என்பனவற்றையும் பொருட்படுத்தாமல், குறிப்பிட்ட கட்சியொன்றில் போட்டியிடும் வேட்பாளர்களை மையமாகக் கொண்டு வாக்களிக்கப்பட்ட ஒரு தேர்தலாகும். இதில் அவ்வேட்பாளர்களின் குடும்பங்கள், செல்வாக்கு, குடும்ப அளவு என்பனவற்றைக் கொண்டு அவர்களின் செல்வாக்கு அடிப்படையிலேயே மக்கள் வாக்களித்தனர். ஆகவேதான் இக்காரணங்களின் அடிப்படை யிலேயேதான் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். கட்சியின் கொள்கை செயற்பாடுகளைக் கொண்டல்ல என்பது தெளிவாகும். கௌரவ பிரதித் தவிசாளர் அவர்களே உங்களுக்குத் தெரியும் சாதாரணமாக ஒரு வேட்பாளர் எந்தக் கட்சியைச் சேர்ந்திருப்பினும், அதனைப் பொருட்படுத்தாது வேட்பாளர்களின் செல்வாக்கின் அடிப்படையிலே வாக்களித்தனர் என்று கூறும்போது, மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தமிழ் மக்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கே வாக்களித்தனர் என நீங்கள் கூறினால் அது ஐ.தே. கட்சியின் வட-கிழக்கு பிரிப்புக்கு வாக்களித்தார்கள் என்று கூற முடியாது. ஒரு விருப்பு வாக்கெடுப்பு கிழக்கில் வடகிழக்கு இணைப்பு தொடர்பாக நடாத்தப்படுமானால்-முஸ்லிம்களைப் பற்றி நான் கூறவில்லை-தமிழர்கள் பிரதேச சபைத்தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சிக்கு வாக்களித்திருப்பினும்கூட இணைப்புக்கு ஆதரவாகவே வாக்களிப்பர். நான் பத்திரிகையில் படித்தேன். கௌரவ புனர்வாழ்வு அமைச்சர் பி. தயாரத்தின அவர்கள், அம்பாறை மாவட்டத்தில் சில பிரதேச சபைகள் அவரால் வெல்லப்பட்டமை, வடகிழக்குப் பிரிப்புக்கு மக்கள் ஆணை வழங்கியுள்ளதாகக் கூறியுள்ளார் இது தவறான ஒரு கணிப்பாகும்.

நான் மேலும் ஒரு விடயத்தைக் கூறி வைக்க விரும்புகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கம் கிழக்கு மாகாணத்தில் சுமுக நிலை தோன்றிவிட்டதென கூறுகின்றது. மிக நல்லது. அப்படியானால் அபிவிருத்தி முயற்சிகளை அரசாங்கம் தொடங்கலாம். இம்மாகாணத்தின் பாதைகள் மிக மோசமான நிலையில் காணப்படுகின்றன. தொலைத்தொடர்புகள் சீரில்லை. சுகாதார வசதிகள் அறவே இல்லையென்றே கூறலாம். அம்பாறை மாவட்டத்தின் கரையோர வலயத்தில் வாழ்கின்ற மக்கள் மருத்துவ சிகிச்சைக்காக பதுளை, கண்டியை நோக்கிச் செல்கின்றனர். இப்பிரதேசங்களில் இனங்களுக்கிடையிலான பிரச்சினை காரணமாக பயங்கரவாதிகள் தாக்கியபோது அநேக குடியிருப்பு வீடுகளும், வர்த்தக ஸ்தாபனங்களும் நாசமாக்கப்பட்டன. இதுவரை எவ்வித நஷ்ட ஈடும் வழங்கப்படவில்லை. இவ்வாறான விடயங்களைத்தான் அரசு கவனத்தில் எடுக்க வேண்டும். இப்பிர தேசங்களில் வாழ்கின்ற விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதியில்லை. இப்பகுதி மீனவர்கள் தங்களது மீன்படிப் படகுகளை நங்கூரமிட 48–50 மைல் தொலைவில் உள்ள வாழைச்சேனைக்கு தங்கள் படகுகளைக் கொண்டு செல்ல வேண்டும். இங்கு மீன்பிடித்துறைமுகம் ஒன்று கட்டித் தருவோம் என பலவருட காலமாக தம்பட்டம் அடிக்கிறீர்கள். அதே நேரம் மட்டக்களப்பிலிருந்து பொத்துவிலுக்கு புகையிரதப்பாதை அமைக்க நடவடிக்கை எடுக்கிறோமெனவும் கூறுகின்றீர்கள்.

நான் எனது உரையை முடிக்குமுன் இதைக்கூற விரும்புகின்றேன். மக்கள் மத்தியில் தவறான எண்ணம் ஒன்றுள்ளது. அதாவது ஐ.தே.க. அல்லது சி.சு. கட்சி போன்ற பெரிய கட்சிகளில் அங்கத்துவம் பெறும் போது சிறுபான்மை யினருக்காக குரல் கொடுக்க முடியாது என்ற எண்ணம் ஒரு சிலரின் மனதில் இடம் பிடித்துள்ளது. நான் திட்டமாகக் கூறுகின்றேன். எனது கட்சி சிறுபான்மையினர் விடயமாக எவ்வித கட்டப்பாடுகளையோ அல்லது நிபந்தனைகளையோ ·எனது பேச்சுக்கு விதிக்கவில்லை. நான் உறுதியாகக் கூறுகின்றேன் கிழக்கு மாகாணத்தில் உள்ள சிறுபான்மையினரை பொருத்த வரையில் எனது கருத்தையும் எண்ணத்தையும் கட்சியின் கருத்துக்களையும் கூற பூரண சுதந்திரம் பெற்றுள்ளேன்.

நன்றி

**ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி**
**மத்திய குழு – கல்முனை.**

இப்பிரசுரம் கொழும்பு 5 இல் வசிக்கும் ஐ.எல். தாவூத் அவர்களால் கொழும்பு – 2ல் அமைந்துள்ள கிரஸன்ட் பப்ளிகேஸன்ஸ் பிரைவட் லிமிட்டெட் இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org